தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

28.11.2012 P.M

29.11.2012 A.M

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 4 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை மாலை 4 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

கடந்த 25-ஆம் தேதி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 465 கன அடியாக இருந்தது. இதனால், காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீர் அளவு வினாடிக்கு ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் குறைந்ததால், மீன் பிடிப்புத் தொழில், மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை முதல் அணைக்கு நீர்வரத்து திடீரென அதிகரிக்கத் தொடங்கியது. புதன்கிழமை மாலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 4,054 கன அடியாக அதிகரித்தது. ஆனாலும், அணையின் நீர்மட்டம் 47.96 அடியாக உள்ளதால், நீர் மின் நிலையங்கள் வழியாக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியாது. கீழ்மட்ட மதகுகள் மூலமே தண்ணீர் திறக்கப்படும். இதற்காக மதகுகளில் கிரீஸ் தடவும் பணி நடபெற்று வருகிறது. கடந்த 2003-ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போதுதான் அணையில் நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளதாக விவசாயிகள் கூறினர். புதன்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47.96 அடியாக இருந்தது. வினாடிக்கு 4,054 கன அடி தண்ணீர் வருகிறது. பாசனத்திற்கு வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 16.55 டிஎம்சியாக உள்ளது.

## நாளொன்றுக்கு 27 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் , 4 டன் நெய் விற்பனை : அமைச்சர் வி.மூர்த்தி தகவல்

சென்னையில் நாளொன்றுக்கு 27 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது, 4 டன் நெய் விற்பனை செய்யப்படுகிறது என பால் வளத்துறை அமைச்சர் வி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புதன்கிழமை ஆவின் நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கை: மாதவரம் பால் பண்ணையில் பால் வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி தலைமையில் ஆவின் பால்

மற்றும் பால் பொருள்கள் விற்பனையை அதிகரிப்பது குறித்த ஆய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இக்கூட்ட முடிவில் அமைச்சர் பேசியது: அரசு அறிவித்துள்ள பல்வேறு பால் வளத் திட்டங்களின் வாயிலாக பால் கொள்முதல் அதிகரித்துள்ளது. நாளொன்றுக்கு 27 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதை 30 லட்சமாக அதிகரிக்க அதிகாரிகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு குறித்த நேரத்தில் பணப் பட்டுவாடா செய்ய வேண்டும்.

நாளொன்றுக்கு 3 டன் வெண்ணை, 4 டன் நெய் விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் நாளொன்றுக்கு ஆவின் பால் பொருள்கள் விற்பனை ரூ.28 லட்சம் அளவு உயர்ந்துள்ளது. அம்பத்தூர் பால் பண்ணையில் 1000 லிட்டர் ஐஸ்கீரீம் உற்பத்தி திறன் உள்ளது. ரூ. 1 கோடி மதிப்பீட்டில் ஐஸ்கிரீம் உற்பத்தியை 2000 லிட்டராக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

பால் தணிக்கைத் துறை இயக்குநர் எம். செந்தமிழ்ச் செல்வன், இணை நிர்வாக இயக்குநர் என்.சுப்பையன், பொதுமேலாளர் (பணிக்குழு) குமாரவேல் பாண்டியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

28th nove 2012 P.M

**விவசாயிகளுக்கான ரபி முன்பருவ பயிற்சி முகாம்**

சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டை ஒன்றியம் பு.முட்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வேளாண்துறை சார்பில் ரபி முன்பருவ பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் பிரேமலதா ராமமூர்த்தி முன்னிலை வகித்தார்.

வேளாண் உதவி இயக்குநர் சு.ரமேஷ் வரவேற்றார்.

வேளாண் துணை இயக்குநர் (மாநில திட்டங்கள்) முனைவர் க.இளங்கோ பேசுகையில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தை நல்ல முறையில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

வேளாண் துணைஇயக்குநர் (மத்திய திட்டங்கள்) வி.சந்திரமோகன், வேளாண் துணை இயக்குநர் (பொறுப்பு) பி.ராஜேந்திரன், வேளாண் அலுவலர் சித்ரா, விதை சான்று அலுவலர் அமிர்தராஜ், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கிளை மேலாளர் ஆர்.கிள்ளிவளவன், அட்மா திட்ட வட்டார ஆலோசனைக்குழுத் தலைவர் வீரபாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

முகாமில் விவசாய சங்கத் தலைவர்கள் பி.ரவீந்திரன், விஜயக்குமார், கணேசன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

முகாமில் துணை வேளாண்மை அலுவலர் திருஞானம் திருந்திய நெல் சாகுபடியில் நடவுச் செய்யும் முறை குறித்தும், உதவி வேளாண் அலுவலர் தாமரைக்கனி மனிலாவில் விதை நேர்த்தி செய்யும் முறை குறித்தும் செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தனர்.

வேளாண்அலுவலர் ப.மதிவாணன் நேரடி விதைப்பு உழவு மானியத்திற்கான விண்ணப்பங்களை விரைந்து விவசாயிகள் அளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் வேலைத் திட்டத்தை வேளாண் பல்கலை . உருவாக்க வேண்டும் : இயற்கை விஞ்ஞானி கோ .நம்மாழ்வார் வலியுறுத்தல்**

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேலைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று இயற்கை விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் வலியுறுத்தினார்.

÷தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநில அளவிலான அங்கக வேளாண்மை கருத்தரங்கில், இயற்கை விஞ்ஞானி கோ.நம்மாழ்வார் பேசியது:

÷உலகத்தை பயமுறுத்தும் அச்சுறுத்தல் பூமி வெப்பமயமாதல் ஆகும். பூமி வெப்பமயமாதல் காரணமாக கடல் மட்டம் உயர்ந்து, கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழல் வரும்.

÷இதற்கு காடுகளை அழித்தல், பெருகி வரும் தொழில்சாலைகள், வாகனப் பெருக்கம், நவீன வேளாண்மை ஆகியவையே பெரும் காரணிகளாக உள்ளன. இதிலும், பூமி வெப்பமயமாதலுக்கு நவீன வேளாண்மை முறை 35 சதவீதக் காரணமாக உள்ளது.

÷பூமி வெப்பமயமாதல் காரணமாக பாதிக்கப்படப் போவது ஏழை நாடுகளே ஆகும். குறிப்பாக, இந்தியாவில் 44 கோடிப் பேர் வறுமையில் வாடுகின்றனர். இவர்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுவர்.

÷பூமி வெப்பமயமாதலுக்கான காரணத்தைக் கண்டறிந்து உடனே நிறுத்த வேண்டும். பூமி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப இன்னும் 150 ஆண்டுகள் ஆகும். நிலம் உயிரோட்டத்தை இழந்து கொண்டிருக்கிறது; வாழ்க்கை வணிகமயமாகிக் கொண்டிருக்கிறது. பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தப்பட்ட உணவை உள்கொள்ளும் மக்களும் புற்றுநோய் உள்ளிட்டவற்றுக்கு ஆளாகின்றனர்.

÷கடந்த 15 ஆண்டுகளில், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத 2.50 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

÷இயற்கை விவசாயத்தின் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தைப் படைத்திட முடியும். இதற்கு, விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உதவ வேண்டும். மேலும், இயற்கை

விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் வேலைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்றார்.
கோ.நம்மாழ்வார் மயக்கம்: பேசி முடித்துவிட்டு, குரல் தளர்ந்த நிலையில், நகர முடியாமல் திடீரென கோ.நம்மாழ்வார் மயங்கிக் கீழே விழுந்தார். அவரை அங்கிருந்த கோ.சித்தர், துணைவேந்தர் கு.ராமசாமி ஆகியோர் தாங்கிப் பிடித்து முதலுதவி அளித்தனர். சில நிமிஷங்களில், அவரே எழுந்து நின்று, தான் ஆரோக்கியமாக இருப்பதாகத் தெரிவித்துவிட்டு, மேடையில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தார்.
÷அடுத்து பெங்களூரில் உள்ள அங்கக வேளாண்மை முகமை மற்றும் அம்ருதபூமி திட்டக் குழுவின் தலைவர் ஏ.எஸ்.ஆனந்த் பேசியது:
÷கர்நாடகத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் 100 விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாநிலம் முழுவதும் 10 ஆயிரம் விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். திராட்சையைத் தவிர
அனைத்து உணவுப் பொருள்களும் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
÷இயற்கை விவசாய முறையைக் கண்டறிந்துகொள்ள தமிழக விவசாயிகள், கர்நாடகத்திற்கு வந்து பார்வையிட வேண்டும். இரு மாநில விவசாயிகளும் தகவல் பரிமாற்றங்களைச் செய்துகொள்ள வேண்டிய தருணம் இது.
÷கேரளத்தில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் இணைப் பேராசிரியர் ஆர்.இளங்கோவன் பேசியது:
÷விஷமாக்கப்பட்ட உணவுகளை உள்கொள்வதால் விஷ உணர்வுதான் மக்களுக்கு வருகிறது. இயற்கை விவசாயத்தை மேம்படுத்த பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இயற்கை வேளாண்மையை அமலாக்குவதில், தமிழ்நாடு
வேளாண்மைப் பல்கலைக்கழகம் முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.
÷அங்கக வேளாண் விவசாயி மற்றும் இயற்கை மருத்துவ நிபுணர் கோ.சித்தர் பேசியது:
÷கடந்த 20 ஆண்டுகளாக தீவிரமாக இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். உடல் நலத்தைப் பேணிக் காக்க இயற்கை விவசாயத்தால் விளைவிக்கப்பட்ட பொருள்கள் பயன்படுகின்றன.
÷விவசாயி என்பவர் நல்ல வியாபாரியாகவும் இருக்க வேண்டும். இயற்கை விவசாயத்தில் விளைவிக்கப்பட்ட பொருள்களை முறையான வகையில் அதிக விலை வைக்காமல் விற்பனை செய்து வருகிறேன். பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாத்து, பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகளுக்கும் உதவி வருகிறேன் என்றார்.

**"வேளாண் பல்கலை.**
**யாருக்கும் எதிரியல்ல'**

""தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் யாருக்கும் எதிரியல்ல'' என்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கு.ராமசாமி தெரிவித்தார். அவர் மேலும் பேசியது:

÷நான் மாணவப் பருவம் தொடங்கி ஆசிரியர், துணைவேந்தர் பதவி வரை சுமை தூக்கும் தொழிலாளியாகவே கருதி பணிபுரிந்து வருகிறேன். யாரையும் ஒதுக்கிவிடவில்லை. பல்கலைக்கழகத்திற்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லை. நடுநிலையோடுதான் செயல்பட்டு வருகிறோம்.
÷விவசாயிகளுக்கு உதவவே நாங்கள் இருக்கிறோம். நாங்கள் யாருக்கும் எதிரி அல்லர். இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க அரசு ஒரு குழு அமைத்து பணிகளைச் செய்து வருகிறது. இதையொட்டி, இயற்கை வேளாண்மை குறித்த கருத்தரங்குகளை நடத்தி விவசாயி களை ஊக்கப்படுத்தி வருகிறோம் என்றார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3,500 ஆக அறிவிக்கக் கோரி சென்னையில் போராட்டம் : விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர்**




கரும்பு விலையை டன்னுக்கு ரூ.3,500 ஆக உயர்த்தி அறிவிக்கக்கோரி சென்னை கோட்டை முன்பு விரைவில் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே.பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கூறினார்.

ஈரோடு மூலப்பாளையத்தில் புதன்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநில மாநாட்டில் பங்கேற்க வந்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

கரும்பு சாகுபடி செய்வதற்கு தேவையான உரங்கள் விலை கடந்த ஓராண்டில் பல மடங்கு உயர்ந்துள்ளது. வேலையாள்கள் பற்றாக்குறை காரணமாக உற்பத்திச்செலவு அதிகரித்துள்ளது. இந்நிலையில், கரும்பு கொள்முதல் விலையை ரூ.2,350 என மாநில அரசு அறிவித்துள்ளது ஏமாற்றம் அளிக்கிறது.

கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட கரும்பு விலையைவிட டன்னுக்கு ரூ.250-யை மத்திய அரசு அதிகரித்துள்ளது. இதுவும் குறைவான தொகைதான். ஆனால், மாநில அரசு விலையை உயர்த்தவில்லை. கரும்புக்கு டன்னுக்கு ரூ.3,500 உயர்த்தி மாநில அரசு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் பிற விவசாயிகள் சங்கங்களை ஒருங்கிணைத்து சென்னை கோட்டை முன்பு

டிசம்பரில் போராட்டம் நடத்தப்படும். மத்திய அரசு நியமித்துள்ள டாக்டர் சி.ரங்கராஜன் குழு பரிந்துரைகளை அமல்படுத்தினால் கரும்பு விவசாயிகள் முற்றிலும் பாதிக்கப்படுவார்கள்.

இந்தியாவில் கரும்பு விவசாயம் அழிந்துவிடும். சர்க்கரை ஆலைகளும் காணாமல் போய்விடும். சர்க்கரையை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யக்கூடிய நிலை உருவாகும். எனவே, ரங்கராஜன் குழு பரிந்துரைகளை அமல்படுத்தக்கூடாது.

தமிழகத்தில் சுமார் 6 லட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. விவசாயத்துக்கு மின்சாரம் முறையாக வழங்கப்படாததால் கரும்புகள் காய்ந்துவிடும் நிலை உருவாகியுள்ளது. எனவே, விவசாயத்துக்கு போதிய அளவு மின்சாரம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இம்மாநாட்டில் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னுசாமி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகல் சங்க மாநிலப் பொதுச்செயலர் டி.ரவீந்திரன், மாநிலத் தலைவர் என்.பழனிச்சாமி, இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலப் பொதுச்செயலர் ஆர்.விருத்தகிரி, ஈரோடு மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பி.காசியண்ணன், சக்தி சர்க்கரை கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர டி.பி.கோபிநாத் உள்பட பலர் பங்கேற்றனர்.

## நாற்றங்கால் முறையில் அதிக மகசூல் : துவரைச் சாகுபடி தொழில்நுட்பங்கள்



தமிழகத்தின் தாவர புரதத் தேவை பத்து லட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். ஆனால் சராசரி உற்பத்தி 2 லட்சம் மெட்ரிக் டன்கள் மட்டுமே. புரதச் சத்து அளிப்பதில் பயறு வகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பயறு வகைகளில் துவரை முக்கிய உணவுப் பயிராகும். இதை விவசாயிகள் ஊடுபயிராகவோ,வரப்பு ஓரங்களிலோ பயிர்செய்து வருகின்றனர்.

துவரையைத் தனியாகப் பயிர் செய்து, அதிக பலன் பெற்று உற்பத்தியையும் அதிகரிக்கும் நோக்கத்தில், வேளாண்மை துறை மூலமாக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி துவரையை நாற்றங்கால் அமைத்து பின்பு நடவு செய்யலாம். இம்முறை திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் வட்டாரத்தில் முதன் முதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து,நெல்லை மாவட்டம் ஆலங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இ.வ.நா.முத்துஎழில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

ரகம்: கோ.ஆர்.ஜி-7 என்ற துவரை ரகம் நடுத்தர வயது உடையது. 135 முதல் 140 நாள்களில் பலன் அளிக்கக் கூடியது.

விதை அளவு: ஒரு ஏக்கர் நடவு செய்ய,ஒரு கிலோ விதை போதுமானது. கால்சியம் குளோரைடு 20 கிராம் வீதம், ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து விதைகளை ஒருமணி நேரம் ஊற வைத்து,பின்னர் 7 மணி நேரம் நிழலில் காயவைத்து, டிரைக்கோ டெர்மா விரிடி விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்பு ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

நாற்றங்கால் தயாரிப்பு: நாற்றங்கால் பாலித்தீன் பாக்கெட்டுகளில் தயார் செய்ய வேண்டும். மணல் மற்றும் நன்கு மக்கிய தென்னை நார் கம்போஸ்ட் கொண்டு,பாலித்தீன் பைகளை நிரப்ப வேண்டும்.

இந்த பைகளில் நீர் தேங்காமல் இருக்க இரு துளைகள் இருக்க வேண்டும். நாற்றுகள் நடுவதற்கு 25 முதல் 30 நாள்களில் தயாராகி விடும். நாற்று விட்டு நடுவதன் மூலம், மகசூல் 12 சதவீதம் அதிகமாக பெற முடியும்.

நடவுமுறை: நடவு வயலில் கடப்பாறை கொண்டு துளை போட வேண்டும். வரிசைக்கு வரிசை 6 அடியும், செடிக்கு செடி 3 அடியும் விட்டு நடவு செய்வதற்கு ஏக்கருக்கு 2420 கன்றுகள் தேவைப்படும்.

அதுவே வரிசைக்கு வரிசை 5 அடியும்,செடிக்கு செடி 3 அடியும் விட்டு நடவு செய்தால், ஏக்கருக்கு 2904 கன்றுகள் தேவைப்படும். நடவு செய்யும் போது குழியில் ஈரப்பதம் இருக்க வேண்டும். ஒரு குழிக்கு இரண்டு நாற்றுகள் நட வேண்டும். ஒரு நாற்று நன்கு வளர்ந்த பிறகு மற்றொன்றைப் பிடுங்கி விட வேண்டும்.

நீர்ப்பாசனம்:அதிக அளவு நீர் தேங்கக் கூடாது.நடவுப் பருவம், பூக்கும் பருவம், பிஞ்சுவிடும் பருவம் ஆகிய பருவங்களில் கண்டிப்பாக நீர் பாய்ச்ச வேண்டும். நுண்ணீர் பாசனம்,தெளிப்பு நீர் கருவி அல்லது மழைத் தூவான் பயன்படுத்தி பாசனம் செய்யலாம்.

மண் அணைத்தல்: நடவு செய்த 20 முதல் 30 நாள்கள் கழித்து மண் அணைக்க வேண்டும். கைக்களை எடுத்து மண் அணைக்க வேண்டும்.

உரமிடுதல்: இறவைப் பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ தழைச் சத்து,50 கிலோ மணிச்சத்து,25 கிலோ சாம்பல் சத்து, 20 கிலோ கந்தகச் சத்து இடுதல் வேண்டும். மணிச் சத்தை சூப்பர் பாஸ்பேட் மூலம் இடவில்லை எனில் ஜிப்சம் மூலமாக இடவேண்டும். இறவை பயிருக்கு,ஒரு ஹெக்டேருக்கு 110 கிலோ ஜிப்சம் இடலாம்.

நுனி கிள்ளுதல்: நடவு செய்த 20 முதல் 30 நாள்கள் கழித்து நுனியைக் கிள்ள வேண்டும். இதனால் அதிக பக்கக் கிளைகள் விட்டு அதிக பூக்கள் மற்றும் காய்கள் பிடிக்கும்.

இலைவழி நுண்ணூட்டம்: நடவு செய்த 30 நாள்கள் கழித்து,15 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை டி.ஏ.பி. கரைசல் 2 சதவீதம் தெளிக்க வேண்டும். இதனால் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். காய்கள் நன்கு திரட்சியாப் பிடிக்கும். மணிகளில் எடையும் அதிகரிக்கும்.

பயிர் பாதுகாப்பு: ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். பொருளாதார சேதநிலை அறிந்து பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்த வேண்டும். இனக் கவர்ச்சிப் பொறி அமைத்து தாய் அந்துப் பூச்சிகளை அழிக்க வேண்டும்.

காய்த் துளைப்பான் தாக்குதல் தென்பட்டால் ஹெனிக்கோவெர்பா அல்லது என்.பி.வி. கரைசல் தெளிக்கலாம் அல்லது இண்டாக்சிகார்ப்-0.3 மிலி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

அறுவடை: நடவு முறையில் ஏக்கருக்கு 1000 கிலோ என்ற அளவில் மகசூல் கிடைக்கும். ஹெக்டேருக்கு 2500 கிலோ வரை மகசூல் கிடைக்கும். காய்கள் 80 சதவீதம் முதிர்ச்சி அடைந்தவுடன் செடிகளை அறுத்து கட்டி,பின்பு வெயிலில் காயவைத்து மணிகளைப் பிரித்து எடுக்க வேண்டும்.

மேற்கண்ட முறையில் கோ.ஆர்.ஜி.-7 துவரையை நாற்றங்கால் அமைத்து நடவு செய்து விவசாயிகள் அதிக பலனடைய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## பெண்கள் கூட்டணியில் புதிய வேளாண் திட்டம்



நமது கிராமப் புறங்களில் கணவனை இழந்த பெண்களும், குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்களும், கூட்டாக இணைந்து வேளாண் துறையில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு, கெப்ரவமாக வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக 1994-ம் ஆண்டில் தொடங்கி 20 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு சார்பில் இப்புதிய வேளாண் மாற்று செயல்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இக்கூட்டு விவசாய முறையின் வாயிலாக கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு, வேளாண் உற்பத்தி மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகள் வெகுவாக பெருகி வருகின்றன. இயற்கை வேளாண் முயற்சிகளைக் கொண்டு இயங்கி வரும் இப்பெண்கள் சங்கங்களால் சுற்றுச்சூழல் மாசுபாடு இல்லாத வேளாண் உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்த முடிகிறது.

கூட்டு விவசாயம் செயல்படும் முறை குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீண் தெரிவித்தது:

தற்போது கூட்டு விவசாயப் பணிகளை மேற்கொள்ள 10 பெண் உறுப்பினர்களை கொண்ட கிராமப்புற சங்கங்கள் தேர்வு செய்யப்படுகிறது. இதில் கணவனை இழந்த பெண்கள், குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள், நிலம் இல்லாத பெண் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக கொண்டு செயல்படும் சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுடன் விவசாயப் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு களப் பணியாளர்களுடன் நடத்தப்படும் இக்கூட்டங்களில் குழுக்கள் தங்களின் உழைப்பு மற்றும் முதலீட்டுத் திறனுக்கு ஏற்ற விவசாய நிலங்களைத் தேர்வு செய்து, தங்கள் கிராமங்களில் 3 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தின்படி நிலத்தின் உரிமையாளருக்கு மூன்றில் ஒரு பங்கு விளைபொருள்களை வழங்க வேண்டும். பின்னர் விவசாயக் குழுக்களுக்கு தொண்டு நிறுவனம் வாயிலாக வேளாண் பயிற்சிகள் வழங்கப்படும்.

கூட்டாக மேற்கொள்ளும் விவசாய முறைகள், பயிர்களைத் தேர்வு செய்து சாகுபடி செய்யும் முறைகள், புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சிகள் சிறந்த வேளாண் வல்லுநர்கள் கொண்டு வழங்கப்படும்.

பின்னர் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு சார்பில் ஒவ்வொரு பெண் குழுவுக்கும் வேளாண் பணிகளை மேற்கொள்ள விதைப் பணமாக ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது. ÷இதைக் கொண்டு அவர்கள் வேளாண் இடுபொருள்களை விலைக்கு வாங்கி வேளாண் பணிகளை தொடங்க முடியும்.

இக்கூட்டு விவசாய முயற்சியில் வாரந்தோறும் சாகுபடி காலத்தில் பெண்கள் கூட்டம் நடத்தி வேலைப் பகிர்வை செய்து கொள்ள வேண்டும். சுழற்சி முறையில் பெண்கள் வேலைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இப்பணிகள் மேற்கொள்ளும்போது கிடைக்கும் வேளாண் பொருள்களை திறம்பட மறுசுழற்சிக்குப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக களைகளை அகற்றும் போதும் அவற்றை கால்நடை தீவனமாக பயன்படுத்தலாம். அடுத்ததாக நடைமுறையில் இப்பெண் குழுக்கள் செயல்படும் தன்மையைப் பார்த்து அருகில் உள்ள நிலமுள்ள விவசாயிகள் பல உதவிகளை செய்கின்றனர்.

ஆதரவற்ற பெண்களுக்கு இலவசமாக இயற்கை வேளாண் இடுபொருள்களை உற்பத்தி செய்ய மாட்டுக் கழிவுகளை வழங்குகின்றனர். இவ்வாறு பெண்கள் குழுவினர் ஒற்றுமையுடன் செயல்பட்டு பல வேளாண் இயற்கைச் சீற்றங்களை சந்தித்து ஒரு மிகப்பெரிய அளவிலான கிராமப்புற சார்பு வேளாண் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கூட்டு விவசாயத்தின் பிற பயன்கள்: கிராமப்புறங்களில் வறுமை ஒழிக்கப்படுவதுடன் கூட்டு விவசாய முறைகள் வாயிலாக வேளாண் உற்பத்தி பெருக்கம் ஏற்படுகிறது. பெண்கள் குழு முறையான வங்கிக் கணக்குகள் மற்றும் கணக்கு, வழக்குப் புத்தகங்கள், ஆலோசனை, கூட்டு முடிவுப் புத்தகங்களுடன் செயல்படுவதால் திறம்படவும், ஒளிவு, மறைவின்றியும் செயல்பட முடிகிறது.

அதிக விதை விலைகளை கருத்தில் கொண்டு தாங்களே விதை வங்கிகளை உருவாக்கி செயல்படும் பெண்கள் விவசாயக் குழுக்கள் தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் முயற்சிகளில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

எனவே தமிழக கிராமப்புற பெண்கள் தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, சேலம், வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சிறப்பாக செயல்பட்டு வரும் கூட்டு விவசாய முறைகளில் ஈடுபட்டு வறுமை ஒழிப்பில், வேளாண் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டு வளம் பெறலாம் என்கிறார் முனைவர் தி.ராஜ்பிரவீண்.

விவரம் பெற...

இது குறித்து விவரங்கள் பெற வேண்டிய முகவரி: பொன்னுத்தாயி, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு, 79- செண்பக விநாயகர் கோயில்தெரு, கீழபஜார், 7-வது வார்டு, வாசுதேவநல்லூர், சிவகிரி தாலுகா. விருதுநகர்-627758. செல்போன்: 94448 32021.

**வம்பனில் நாளை சம்பங்கி மலர் சாகுபடி பயிற்சி**

சம்பங்கி மலர் உற்பத்தியில் நவீன சாகுபடி தொழில் நுட்பம் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி நவ.29 வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்த மாவட்ட ஆட்சியரக செய்திக்குறிப்பு:

ஆலங்குடி வட்டத்தில் பெருமளவும், விராலிமலை, குன்றாண்டார்கோவில் வட்டங்களில் சில பகுதிகளிலும் சம்பங்கி மலர் பயிரிடப்படுகிறது. இம்மலர் செடியில் நூற்புழு தாக்குதல் அதிகம் ஏற்படுகிறது. இதைக் கட்டுப்படுத்துவது குறித்தும், புதிய ரகங்கள் மற்றும் நவீன சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நவ.29-ல் பயிற்சி நடைபெறுகிறது.

தொடர்புக்கு: 04322-290321.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

29.11.2012 A.M

## ஏக்கருக்கு ரூ.21 ஆயிரம் பயிர் கடன்':தொழில்நுட்ப குழுவில் விவசாயிகள் ஆவேசம்

தஞ்சாவூர்: தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டத்தில், நெல்லுக்கு ஏக்கருக்கு பயிர் கடனாக, 21 ஆயிரம் ரூபாய் வழங்கக்கோரி, கூட்டுறவு சங்க அதிகாரிகள், விவசாயிகள் அடங்கிய தொழில்நுட்பக்குழு கூட்டத்திலிருந்து, விவசாயிகள் வெளிநடப்பு செய்ய முயற்சித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், கூட்டுறவு சங்க அதிகாரிகள் அடங்கிய தொழில்நுட்பக்குழு கூட்டம், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியில் நடந்தது. இதில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அந்தோணிசாமி பீட்டர் தலைமை வகித்தார். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் குமார் உள்பட அதிகாரிகள், அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

தஞ்சை, திருவாரூர், நாகை விவசாயிகள் தரப்பில் கோரிக்கைகளை முன்வைத்து பேசியதாவது: நெல்லுக்கு பயிர் கடனாக ஏக்கருக்கு, 21 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். உர விலையேற்றத்தை கவனத்தில் கொண்டு, கரும்புக்கு நடவுக்கு, 45 ஆயிரம் ரூபாயும், மறுதாம்புக்கு, 40 ஆயிரம் ரூபாயும் உயர்த்தி வழங்க வேண்டும்.

கடந்தாண்டு டி.ஏ.பி., உரம் ஒரு மூட்டை, 485 ரூபாய்க்கு விற்றது. தற்போது 1,215 ரூபாயாக விலையுயர்ந்துள்ளது. வெறும், 250 ரூபாய்க்கு விற்ற பொட்டாஷ் உரம், 855 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தினக்கூலியாக தொழிலாளர்களுக்கு, 150 ரூபாய் முதல், 250 ரூபாய் வரை, வழங்கப்படுகிறது.

பயிர்களை நடவு செய்து விளைவிப்பது முதல், அறுவடை செய்வது வரை, பலமடங்கு செலவு அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் இருக்கும் வகையில், ஏக்கர் நெல்லுக்கு, 21 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் பேசினர்.

இணைப்பதிவாளர் அந்தோணிசாமி ஜான்பீட்டர் பேசுகையில், ""2013-14ம் ஆண்டுக்கு துணைக்குழு பரிந்துரைப்படி ரொக்கமாக, 11 ஆயிரம் ரூபாயும், உரத்துக்கு, மூவாயிரம் ரூபாயும், பூச்சி மருந்துக்கு, ஆயிரம் ரூபாயும் கணக்கிட்டு, ஏக்கருக்கு, 16 ஆயிரம் ரூபாய் மட்டுமே பயிர் கடன் வழங்க முடியும்," என்றார்.

இதனால் ஆவேசமடைந்த விவசாயிகள், ஏக்கருக்கு நெல்லுக்கு, 21 ஆயிரம் ரூபாய் பயிர் கடன்

வழங்காவிட்டால் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்வதை தவிர வேறுவழியில்லை என்றுகூறி, வெளியேற முயற்சித்தனர்.

இதனால், அதிர்ச்சியடைந்து, இடைமறித்து பேசிய, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் குமார், "கூட்டத்தின் துவக்கம் முதல் ஏக்கர் நெல்லுக்கு, 21 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என, வலியுறுத்தும் நிலையிலிருந்து சற்று, கீழே இறங்கி வர வேண்டும்' என விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து, ஏக்கர் நெல்லுக்கு பயிர் கடனாக, 19 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தினர். ஆனால், 17 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வழங்க முடியாது என, மறுத்த அதிகாரிகள், விவசாயிகளின் பிடிவாதத்தால், ஏக்கருக்கு, 19 ஆயிரம் ரூபாய் பயிர் கடன் வழங்கப்படும் என, அறிவித்தனர். இதனால், இரண்டு மணி நேரம் நிலவிய பரபரப்பு முடிவுக்கு வந்தது.

## இரண்டாம் போக நெல் சாகுபடிவிவசாயிகள் குழப்பம்

கம்பம்:இரண்டாம் போக நெல் சாகுபடியில் அரசு துறை அதிகாரிகள் முரண்பட்ட கருத்துக்களை தெரிவிப்பதால், விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர்.தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால், கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் சாகுபடி கைவிடப்பட்டது. தாமதமாக மழை பெய்து அணையின் நீர் மட்டம் உயர்ந்ததால், தற்போது இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு விவசாயிகள் முயற்சி செய்கின்றனர். இதற்கிடையே கம்பம் பள்ளத்தாக்கில் சில பகுதிகளில் முதல் போக சாகுபடி செய்தவர்களும், அறுவடையை முடித்து, இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு நடவு துவங்கியுள்ளனர்.

இரண்டாம் போக நெல் சாகுபடி விவசாயிகளிடம், பொதுப்பணித்துறை மற்றும் விவசாயத்துறையினர் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

பொதுப்பணித்துறையினர்," அணையின் நீர் மட்டம் 117 அடியாக உள்ளது.இப்போது நடவு செய்யும் பயிர்களுக்கு இன்னும் 4 மாதங்களுக்கு தண்ணீர் தேவைப்படும். விவசாயத்திற்கு தண்ணீர் வழங்குவது சிரமமாக இருக்கும் என்பதால் தவிர்ப்பது நல்லது என்று பொதுப்பணித்துறையினர் கூறுகின்றனர்.

விவசாயத்துறையினர்," திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யுங்கள்'என்று கூறி பிரசாரம் செய்கின்றனர். முரண்பட்ட கருத்துக்களை கூறுவதால், விவசாயிகள் குழம்பியுள்ளனர். இது குறித்து இரு துறை அதிகாரிகளும் ஒரு முடிவுக்கு வரவேண்டும். தவறும் பட்சத்தில், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

## கருகிய பயிரை காத்த மழை

சிங்கம்புணரி: சிங்கம்புணரியில் தண்ணீரின்றி காய்ந்த நெல்பயிர்,எதிர்பாராத மழையால் தப்பியது. அணைக்கரைப்பட்டி, கண்ணமங்கலப்பட்டி, வேங்கைப்பட்டி உட்பட சுற்று கிராமங்களில் நெல் நடவு செய்து வளர்ந்துள்ளது.
கண்மாய்களில் தண்ணீர் இல்லாமல் பல ஏக்கர் பயிர்கள் கருகும் சூழ்நிலை உருவானது. கடந்த இரண்டு நாட்ளாக காற்றுடன் கூடிய நல்லமழை பெய்தது.இதனால் பயிர்கள் தற்காலிமாக காப்பாற்றப்பட்டுள்ளது.
தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே விளைச்சலுக்கு வரும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**புதூர் வட்டாரத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

கோவில்பட்டி : கோவில்பட்டி அருகே புதூர் வட்டாரத்தில் விவசாயிகளுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது.
கோவில்பட்டி கோட்டம் புதூர் வட்டாரத்திலுள்ள வெம்பூர் கிராமத்தில் விவசாயிகளுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை சார்பில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் குழுக்களின் திறன் வளர்த்தல் பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமிற்கு வெம்பூர் கிராம உற்பத்தியாளர் குழு தலைவர் சண்முகையா தலைமை வகித்தார். கோவில்பட்டி கோட்ட வேளாண்மை வேளாண் வணிக அலுவலர் பொன்னுராஜ் வரவேற்றார். தொடர்ந்து கோவில்பட்டி மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் மனோகரன் மண்பரிசோதனை குறித்தும், ஸ்காட் கேவிகே வட்டார அலுவலர் சுந்தரராஜன் வேளாண்மை அறிவியல் மைய திட்டங்கள் குறித்தும், தூத்துக்குடி மாநில அக்மார்க் ஆய்வக வேளாண்மை அலுவலர் சங்கர் அக்மார்க் குறித்தும், கோவில்பட்டி உழவர் சந்தை அலுவலர் விஜயன் உழவர் சந்தையின் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து பேசினர். மேலும் புதூர் வட்டார மேலாண்மை அட்மா திட்ட அலுவலர் தனபால் அட்மா திட்டப்பணிகள் மற்றும் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், கோவில்பட்டி உதவி வேளாண்மை அலுவலர் நீலகண்டன் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்து அதன் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து நல்ல விலைக்கு விற்பனை செய்வது குறித்தும் பேசினர். புதூர் உதவி வேளாண்மை அலுவலர் சரவணக்குமார் நன்றி கூறினார். பயிற்சியில் வெம்பூர் கிராமத்தை சேர்ந்த சுமார் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சியை விளாத்திகுளம் உதவி வேளாண்மை அலுவலர் சீனிவாசன் ஏற்பாடு செய்திருந்தார்.

**கரும்புக்கு அரசின் விலை ஏற்க முடியாது :கரும்பு விவசாயிகள் மாநாட்டில் முடிவு**

ஈரோடு: ஈரோட்டில் நடந்த கரும்பு விவசாயிகள் சங்க கூட்டத்தில், ""கரும்புக்கு மத்திய, மாநில அரசுகள் நிர்ணயித்துள்ள, விலையை ஏற்க முடியாது. கரும்பு விலையை உயர்த்த, அடுத்த மாதம் சென்னையில் போராட்டம் நடத்தப்படும்," என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
ஈரோட்டில், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின், மாநில மாநாடு, மாநில தலைவர் பழனிசாமி தலைமையில் நடந்தது. மாவட்ட அனைத்து விவசாயிகள் கூட்டமைப்பு வரவேற்புக்குழு தலைவர் காசியண்ணன் வரவேற்றார்.
மாநில துணை தலைவர் நல்லாக்கவுண்டர், கொடியேற்றி மாநாட்டை துவக்கி வைத்தார்.
தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் பாலகிருஷ்ணன் பேசினார்.
மாநாட்டுக்கு பின், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: கரும்பு உற்பத்தி செலவு, வெட்டுக்கூலி உயர்ந்த நிலையில், ஒரு டன் கரும்புக்கு, 2,350 ரூபாய் என அரசு விலை அறிவித்துள்ளதை ஏற்க முடியாது.
கரும்பு சாகுபடியால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய முடியாமல், விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்படுவர். கரும்பு ஒரு டன்னுக்கு, 3,500 ரூபாய் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகம் ஏற்படுத்த, அரசு உத்தரவிட வேண்டும்.
கரும்பு விவசாயிக்கு விலை உத்திரவாதம் இல்லாத வகையிலும், கூட்டுறவு, பொதுத்துறை ஆலைகளை, தனியாருக்கு தாரை வார்க்கும் வகையிலும், பொது விநியோகத்தில் மக்களுக்கு குறைந்த விலைக்கு சர்க்கரை வழங்குவதை தடை செய்யும் வகையிலும் உள்ள, ரங்கராஜன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு நிராகரிக்க வேண்டும்.
மத்திய அரசு மவுனம் காக்காமல், கர்நாடக அரசை வற்புறுத்தி, சம்பா சாகுபடிக்கு தேவையான தண்ணீரை பெற்றுத் தர வேண்டும். உலகில் அன்னிய முதலீட்டை அனுமதித்த நாட்டின், சில்லறை வணிகமும், விவசாயமும் அழிந்தது.
எனவே, இந்தியாவில் சில்லறை வணிகத்தில், அந்நிய முதலீட்டை அனுமதிக்க கூடாது.
கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில், 2,500 முதல், 3,000 டன்னாக இருக்கும் வகையில், அரவைக்காலம் முழுவதும் தடையில்லாமல் கரும்பு கிடைக்கும் வகையில், கரும்பு விவகார எல்லைகள் பாதுகாக்க வேண்டும்.
அரசு நிர்வாகத்தால், கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலையில் ஏற்பட்ட, 1,650 கோடி கடனை, அரசு ஏற்று, கடனில்லாமல் கூட்டுறவு சர்க்கரை ஆலையை விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டும். 1966ல் இயற்றப்பட்ட கரும்பு சட்டத்தை மத்திய அரசு பாதுகாக்க வேண்டும்.
இது போன்ற பல கோரிக்கையை வலியுறுத்தி, அடுத்த மாதம் சென்னை கோட்டை முன், மாபெரும் போராட்டம் நடத்த உள்ளோம். மற்ற சங்கங்களுடன் பேசி, தேதி, நேரம் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கரும்பு விவசாயிகள் சங்க முன்னாள் மாநில பொது செயலாளர்கள் மணி, பாண்டி உள்பட பலர் பங்கேற்றனர்.

**வறட்சியால் நெல் சாகுபடி பரப்பு குறைவு : பஞ்சம் வருமென விவசாயிகள் ஆருடம்**

ஈரோடு : வறட்சியின் காரணமாக ஈரோடு மாவட்டத்தில், 5,000 ஏக்கரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில் கீழ்பவானி, காலிங்கராயன், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை, மேட்டூர் வலதுகரை பாசன சபை ஆகியவை உள்ளன.
இந்த பாசன சபைகள் மூலம் ஆண்டுதோறும், 2.5 லட்சம் ஏக்கர் விலை நிலங்கள் பாசனம் பெறுகின்றன. நான்கு பாசன சபை மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ஏக்கர் விளை நிலத்தில் மட்டும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.
ஐ.ஆர்., 20, ஏ.டி.டி., 36, ஏ.டி.டி., 43, ஏ.டி.டி., 45, கோ 36, கோ 39, கோ 43, பி.பி.டி., பொன்னி ஆகிய ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. ஈரோட்டில், 100 அரிசி ஆலைகள், பெருந்துறையில் மற்றும் கோபியில் தலா, 40 ஆலைகள், பவானியில், 15 ஆலைகள், சத்தியமங்கலத்தில், ஐந்து ஆலைகள் என மாவட்டத்தில் மொத்தம், 200 ஆலைகள் உள்ளன.
நெல்லினை அரிசியாக மாற்றி ஈரோடு மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள சந்தைகளுக்கும், ஆலைகளுக்கும் விற்பனைக்காக விவசாயிகள் வழங்குகின்றனர்.
நடப்பாண்டில் போதிய பருவமழை இன்றி, தமிழகத்தில் தஞ்சை உட்பட அனைத்து மாவட்டத்திலும் நெல் சாகுபடி பரப்பளவு கணிசமாக குறைந்தது.
அதன் தாக்கம் ஈரோடு மாவட்டத்தையும் விட்டு வைக்கவில்லை. ஈரோடு மாவட்ட விவசாயிகள் கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் பாசனத்தையே அதிகளவில் நம்பியுள்ளனர். நடப்பாண்டில் போதிய பருவமழை இன்றி, நெல் சாகுபடியின் பரப்பளவு கணிசமாக குறைந்து வருகிறது. ஐந்து ஏக்கருக்கு குறைவில்லாமல் நெல் சாகுபடி செய்த விவசாயிகள், கூலி ஆட்கள் பற்றாக்குறை, மின் தட்டுப்பாட்டால், விவசாயிகள் நெல் சாகுபடியை குறைத்துள்ளனர்.
அவ்வாறு சாகுபடி செய்தாலும், நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர். இதனால் ஈரோடு மாவட்ட விவசாயிகள், தங்கள் வீட்டு பயன்பாட்டுக்கு மட்டும், ஓரிரு ஏக்கரில் நெல் சாகுபடி செய்கின்றனர்.
அம்மாபேட்டை, நெருஞ்சிபேட்டை உள்ளிட்ட பகுதிகளில் ஓரிரு ஏக்கரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
கீழ்பவானி பாசன சங்கத்தலைவர் நல்லசாமி கூறியதாவது:
தற்போது தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் மட்டும், 25 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் இன்னும் திறக்கவில்லை. நடப்பாண்டில் ஈரோடு

மாவட்டத்தில் நெல் சாகுபடி என்பது, ஒரு லட்சத்து, மூவாயிரம் ஏக்கர் பயிரிடப்படவில்லை. காலிங்கராயன் பாசனத்தில் அதிகளவு மஞ்சள் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
மற்ற பாசனங்களை பொருத்தவரையில் நடப்பாண்டில், 5,000 ஏக்கர் கூட விவசாயிகள் நெல் சாகுபடி செய்யவில்லை. தஞ்சை மாவட்டத்திலும் சம்பா பயிர் சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் அவதியுறுகின்றனர். அடுத்தாண்டில் நிச்சயம் உணவு பஞ்சம் வரும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## காளான் கொள்முதலை அரசே ஏற்றால் பயன்

குன்னூர்:"நீலகிரியில் காளான் தொழில் பாதிப்படையாமல் இருக்க, அரசே அதனை கொள்முதல் செய்ய வேண்டும்,' என உற்பத்தியாளர்கள் வலியுறுத்தி உள்ளனர்.
நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்ட போது, விவசாயிகளை காக்க, அ.தி.மு.க., அரசு மாற்று பயிர் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மலர் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது. மலர் சாகுபடிக்கு சொந்தமாக நிலம் மற்றும் அதிகளவிலான மூதலீடு தேவைப்பட்டதால், விவசாயிகள் வங்கி கடன்களை பெற்று மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். ஆனால், மலர் சாகுபடியில் தரமற்ற நாற்றுக்கள் வினியோகம் மற்றும் சந்தைப்படுத்துததில் சிக்கல் ஏற்பட்டதால், பல விவசாயிகள் மலர் சாகுபடியை கை விட்டனர்.
காளான் வளர்ப்பு:
இந்நிலையில், சில விவசாயிகள் மலர் சாகுபடியை கைவிட்டு மலை காய்கறி விவசாயம் மற்றும் காளான் வளர்ப்புக்கு மாறியுள்ளனர். மாவட்டத்தில் நிலவும் காலநிலை காளான் வளர்ப்புக்கு ஏற்றதாக உள்ளதால் இதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பல்வேறு மகளிர் சுய உதவிக்கு குழுக்களை சேர்ந்த பெண்கள் காளான் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். குன்னூர் காந்திபுரம் பகுதியில் நகராட்சியின் உதவியுடன் மகளிர் சுய உதவிக்குழுவினர் காளான் வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டன் காளான் கிலோ ஒன்றுக்கு 100 ரூபாய் முதல் 125 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சி காலங்களில் கூடுதலாக விலை கிடைக்கிறது. தற்போது இங்கு உற்பத்தி செய்யப்படும் காளான்கள் தனியார் நிறுவனங்கள் மூலம் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், "தனியார் நிறுவனம் நிர்ணயிக்கும் கட்டணம் மட்டுமே தங்களுக்கு கிடைத்து வருகிறது; உற்பத்தி செய்யப்படும் காளான்களை அரசே கொள்முதல் செய்தால் தங்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும்,' என காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் தெரிவித்துள்ளனர்.

## மரத்தின் தண்டுப்பகுதியில் குலை தள்ளிய வாழை மரம்

தியாகதுருகம்:வழக்கத்திற்கு மாறாக தண்டுபகுதியில் குலை தள்ளியுள்ள வாழை மரத்தை பொதுமக்கள் வியப்புடன் பார்த்துச் சென்றனர்.
ரிஷிவந்தியம் காலனியை சேர்ந்த வீராசாமி என்ற விவசாயி வயலில் வாழை மரங்களை வளர்த்து வருகிறார். அதில் ஒரு வாழைமரம் தண்டுப்பகுதியில் குலை தள்ளியுள்ளது.
வழக்கமாக வாழை மரத்தின் முனையில் குருத்து பகுதியில் இலைகளுக்கு நடுவில் குலைதள்ளி காய்கள் காய்க்கும். இதற்கு மாறாக மரத்தின் தண்டுபகுதியை கிழித்துக்கொண்டு குலை தள்ளியுள்ளது.
தண்டின் இடையே பூக்களில் இருந்து வெளிப்பட்ட வாழை குலையை பார்ப்பதற்கு அப்பகுதியை சேர்ந்த பலரும் அங்கு திரண்டனர். தகவல் அறிந்த பலரும் தண்டுப் பகுதியில் குலைதள்ளிய வாழை மரத்தை வியப்புடன் பார்த்துச் சென்றனர்.

## மஞ்சள் பயிரில் நோய் தாக்கம் அதிகரிப்பு :பனமரத்துப்பட்டி விவசாயிகள் கவலை

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில், இலைகருகல் நோய் மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்கம் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் செடிகளில் இலையின் மேல் பகுதியில், பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றுகின்றன. புள்ளிகள் இலை முழுவதும் பரவி, இலை காய்ந்து கீழே விழுந்து விடுகிறது. அதே போல், இலைகளின் நுனியில் ஒழுங்கற்ற வடிவத்தில் பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றுகிறது. அதன் பின் கறுப்பு நிறமாக மாறி விடுகிறது. இளம் இலைகளை நோய் தாக்குவதால், செடிகள் வளர்ச்சி இன்றி, உற்பத்தி பாதிக்கிறது.
இலைப்புள்ளி மற்றும் இலைகருகல் நோயை தொடர்ந்து, கிழங்கு அழுகல் நோய் தாக்கமும் அதிகரித்துள்ளது. இந்நோய், ஒரு வகையான பூஞ்சாணம் என்பதால், மண் மூலமாக விதை கிழங்கை தாக்குகிறது. கிழங்கு அழுகல் நோய் தாக்கிய செடியின் இலைகளின் நுனி மஞ்சம் நிறமாகி, பின், இலை முழுவதும் மஞ்சளாகி விடுகிறது. இலை, தண்டு ஆகியவை பாதிக்கப்படுவதால், செடிகள் வாடி விடுகிறது.
கிழங்கு அழுகல் நோய் தாக்கிய செடிகள், வேர் பிடிப்பின்றி லேசாக தொட்டால் கூட கையோடு வந்து விடுகிறது. நோய் தாக்கிய கிழங்குகளில், நீர் கசிவு ஏற்பட்டு பழுப்பு நிறமாகி, பின் கிழங்கு அழுகி விடுகிறது. நோய் தாக்கம் காரணமாக, விளைச்சல் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், பயிர் பாதுகாப்புதுறை உதவி பேராசிரியர் கீதா ஆகியோர் கூறியதாவது:
செடிகளில் நோய் தாக்கிய இலைகளை, கிள்ளி எடுத்து எரித்துவிடவேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் மேன்கோசெப், இரண்டு கிராமம், கார்பென்டாசின், இரண்டு கிராம், ஒட்டும்

திரவத்தில் கலந்து தெளிக்க வேண்டும். 15 நாட்கள் இடைவெளியில், காப்பர் ஆக்சிகுளோரைடு, மூன்று கிராம், டீபால், ஒரு மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய் தீவிரத்தை பொறுத்து, பத்து நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த, ஒரு எக்டேருக்கு டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை செய்யும் உயிரியல் பூஞ்சாணத்தை, இரண்டரை கிலோ என்ற அளவில் எடுத்து, 100 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். பூஞ்சாணம் மண்ணில் கலந்து, மஞ்சள் கிழங்கை சுற்றி பாதுகாப்பு வளையம்போல் செயல்பட்டு, நோய் தாக்கத்தை தடுக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மஞ்சள் பயிரில் நோய் தாக்கம் : விவசாயிகள் கவலை

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் பயிரில், இலைகருகல் நோய் மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்கம் அதிகரித்துள்ளது.

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் செடிகளில் இலையின் மேல் பகுதியில், பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றுகின்றன. புள்ளிகள் இலை முழுவதும் பரவி, இலை காய்ந்து கீழே விழுந்து விடுகிறது. அதே போல், இலைகளின் நுனியில் ஒழுங்கற்ற வடிவத்தில் பழுப்பு நிறப்புள்ளிகள் தோன்றுகிறது. அதன் பின் கறுப்பு நிறமாக மாறி விடுகிறது. இளம் இலைகளை நோய் தாக்குவதால், செடிகள் வளர்ச்சி இன்றி, உற்பத்தி பாதிக்கிறது.

இலைப்புள்ளி மற்றும் இலைகருகல் நோயை தொடர்ந்து, கிழங்கு அழுகல் நோய் தாக்கமும் அதிகரித்துள்ளது. இந்நோய், ஒரு வகையான பூஞ்சாணம் என்பதால், மண் மூலமாக விதை கிழங்கை தாக்குகிறது. கிழங்கு அழுகல் நோய் தாக்கிய செடியின் இலைகளின் நுனி மஞ்சம் நிறமாகி, பின், இலை முழுவதும் மஞ்சளாகி விடுகிறது. இலை, தண்டு ஆகியவை பாதிக்கப்படுவதால், செடிகள் வாடி விடுகிறது.

கிழங்கு அழுகல் நோய் தாக்கிய செடிகள், வேர் பிடிப்பின்றி லேசாக தொட்டால் கூட கையோடு வந்து விடுகிறது. நோய் தாக்கிய கிழங்குகளில், நீர் கசிவு ஏற்பட்டு பழுப்பு நிறமாகி, பின் கிழங்கு அழுகி விடுகிறது. நோய் தாக்கம் காரணமாக, விளைச்சல் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், பயிர் பாதுகாப்புதுறை உதவி பேராசிரியர் கீதா ஆகியோர் கூறியதாவது:

செடிகளில் நோய் தாக்கிய இலைகளை, கிள்ளி எடுத்து எரித்துவிடவேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் மேன்கோசெப், இரண்டு கிராமம், கார்பென்டாசின், இரண்டு கிராம், ஒட்டும் திரவத்தில் கலந்து தெளிக்க வேண்டும். 15 நாட்கள் இடைவெளியில், காப்பர் ஆக்சிகுளோரைடு, மூன்று கிராம், டீபால், ஒரு மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய் தீவிரத்தை பொறுத்து, பத்து நாட்களுக்கு ஒருமுறை தெளிக்க வேண்டும்.

கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த, ஒரு எக்டேருக்கு டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை செய்யும் உயிரியல் பூஞ்சாணத்தை, இரண்டரை கிலோ என்ற அளவில் எடுத்து, 100 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவேண்டும். பூஞ்சாணம் மண்ணில் கலந்து, மஞ்சள் கிழங்கை சுற்றி பாதுகாப்பு வளையம்போல் செயல்பட்டு, நோய் தாக்கத்தை தடுக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இந்திய பாசுமதி அரிசிக்கு ஆப்ரிக்காவில் மவுசு



புதுடில்லி:இந்திய பாசுமதி அரிசியில் தயாரிக்கப்படும் பிரியாணி, புலவு உள்ளிட்ட சுவையான உணவு வகைகளை, ஆப்ரிக்க மக்கள் விரும்பி உண்ணத் துவங்கிஉள்ளனர்.இதனால், இந்திய பாசுமதி அரிசியின் ஒட்டுமொத்த ஏற்றுமதி, நடப்பு 2012-13ம் நிதியாண்டின், சென்ற அக்டோபர் வரையிலான ஏழு மாதங்களில் 26 சதவீதம் உயர்ந்து, 19.20 லட்சம் டன்னாக (10,453 கோடி ரூபாய்) அதிகரித்து உள்ளது.

**ஏற்றுமதி:**கடந்த 2011-12ம் நிதியாண்டின் இதே காலத்தில், 16.40 லட்சம் டன் (8,265 கோடி ரூபாய்) பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.சென்ற முழு நிதியாண்டில், 15,450 கோடி ரூபாய் மதிப்பிலான 32.10 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது.இந்தியாவில், காஷ்மீர், இமாச்சல பிரதேசம், பஞ்சாப், அரியானா, டில்லி ஆகிய மாநிலங்களில், அதிகளவில் பாசுமதி அரிசி உற்பத்தியாகிறது.மத்திய அரசு, பாசுமதி அரிசி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், அதன் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நீக்கியுள்ளது.இந்தியாவின் மொத்த பாசுமதி அரிசி ஏற்றுமதியில், 50 சதவீத பங்களிப்பை ஈரான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கொண்டுள்ளன.

**அமெரிக்கா:**வளைகுடா நாடுகளுடன், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்திய பாசுமதி அரிசி ஏற்றுமதியாகிறது.இந்நாடுகளில் இந்திய பாசுமதி அரிசிக்கு தேவை அதிகரித்துள்ளது. சென்ற நிதியாண்டில், அமெரிக்காவிற்கு மட்டும், 900 கோடி ரூபாய் மதிப்பிற்கு, 1.24 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்,

இந்திய பாசுமதி அரிசியில், பூச்சிக் கொல்லி ரசாயனங்கள் உள்ளதாக கூறி, அவற்றை இறக்குமதி செய்ய அமெரிக்கா மறுத்து விட்டது.

கடந்த 2010ம் ஆண்டு கூட, இந்திய பாசுமதி அரிசி ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்பட்டது. ஹம்பர்க்கை சேர்ந்த ஆய்வு நிறுவனமொன்று, இந்திய பாசுமதி அரிசியில் "கார்பண்டசீம்' மற்றும் "ஐசோப்ரோதியோலேன்' என்ற ரசாயனங்கள், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட, 0.03 சதவீதம் அதிகம் இருப்பதாக தெரிவித்தது. இதைத் தொடர்ந்து, 20,000 டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.இது போன்ற பாதிப்புகளை தவிர்க்க, ஆப்ரிக்கா, தூர கிழக்கு நாடு கள் போன்றவற்றுக்கு பாசுமதி அரிசியை சந்தைப்படுத்துவதில், ஏற்றுமதியாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**தேவை:** இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. குறிப்பாக, ஆப்ரிக்காவிற்கான பாசுமதி அரசி ஏற்றுமதி அதிகரித் துள்ளது. அதே சமயம், மேற்கு ஆசிய சந்தைகளிலும், இந்திய பாசுமதி அரிசிக்கு வரவேற்பு பெருகிஉள்ளது. பாரம் பரிய சந்தைகளுடன், புதிய சந்தைகளிலும், இந்திய பாசுமதி அரிசிக்கான தேவை அதிகரித்துள்ளதால், அதன் ஏற்று மதி, ஒட்டுமொத்த அளவில் உயர்ந்துள்ளது என, ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.அதே சமயம், உள்நாட்டில் பாசுமதி நெல் விலை, கடந்த ஆண்டை விட, நடப்பாண்டில் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.

**பரப்பளவு:**பாசுமதி நெல் பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதால், அதன் உற்பத்தி குறை யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால், அதன் விலை உயர்ந்துள்ளது.சென்ற ஆண்டு,பஞ்சாப்,அரியானா மாநிலங்களில், ஒரு குவிண்டால் பாசுமதி நெல் விலை, 1,500-1,700 ரூபாய் வரை இருந்தது. இது, நடப்பாண்டு, 2,700-3,100 ரூபாயாக அதிகரித்து உள்ளது.அது போன்று, சர்வதேச சந்தையில் கடந்த ஆண்டு, ஒரு டன் பாசுமதி அரிசி விலை, 800 - 900 டாலர் என்றளவில் இருந்தது. இது, நடப்பாண்டில், 1,000 - 1,500 டாலராக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## முட்டை விலையில் பெரும் சரிவு



நாமக்கல்: சபரிமலை சீசன் துவங்கியுள்ள நிலையில், தமிழகத்தில் முட்டை விலை 35 காசுகள் குறைந்துள்ளன. நாமக்கல் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு, தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விலையை நிர்ணயம் செய்கிறது. இந்நிலையில், இன்று கூடிய இக்குழுவின் கூட்டத்தில் ரூ. 3.10 ஆக இருந்த முட்டை விலை 35 காசுகள் குறைந்து ரூ. 2.75 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. சபரிமலை சீசன் துவங்கியுள்ளதையடுத்து இந்த விலைக்குறைப்பு என கூறப்பட்டாலும், இந்த அளவுக்கு (35 காசுகள்) இதற்கு முன் குறைக்கப்பட்டதில்லை என கூறப்படுகிறது.

**நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.30 கோடி டன்னாக குறையும்**



புதுடில்லி:நடப்பு 2012-13ம் சந்தை பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின், சர்க்கரை உற்பத்தி, 2.30 கோடி டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளதாக, மத்திய உணவு அமைச்சர் கே.வி. தாமஸ், பார்லிமென்டில் தெரிவித்தார்.இந்தியாவில், நடப்பு பருவத்தில், கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்ததால், சர்க்கரை உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நடப்பு பருவத்தில், சர்க்கரை உற்பத்தி மற்றும் பயன்பாடு, 2.30 கோடி டன் என்ற அளவில் தான் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது. அதேசமயம், உள்நாட்டில், சர்க்கரைக்கான தேவை, 2.23 கோடி டன் என்ற அளவில் தான் இருந்தது. தேவையை காட்டிலும், சர்க் கரை உற்பத்தி அதிகமாக இருந்ததால், பொது உரிமம் அடிப்படையில் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப் பட்டது. அமைச்சகத்தின் சார்பில், கச்சா சர்க்கரை இறக்குமதிக்கு, 20 சதவீத சுங்க வரி வசூலிக்க பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. இது, தற்போது, 10 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

கடந்த 2002ம் ஆண்டு மார்ச் முதல், நியாய விலை கடைகளில், பொது வினியோக திட்டத்தின் கீழ், ஒரு கிலோ சர்க்கரை, 13.50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன் விலையை

உயர்த்துவது குறித்து, மத்திய அரசு எவ்வித முடிவும் எடுக்கவில்லை என, தாமஸ் மேலும் தெரிவித்தார்.

## உணவு பொருள்கள் விலை உயர்வு



புதுடில்லி: நடப்பு ஆண்டில் ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரையிலான 10 மாதங்களில் உணவு பொருட்கள் விலை அதிகரித்துள்ளதாக மத்திய உணவு துறை அமைச்சர் கே.வி. தாமஸ் பாராளுமன்ற மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார். அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், சர்க்கரை மற்றும் காய்கறிகளின் விலை இக்கால கட்டத்தில் கணிசமாக உயர்ந்துள்ளன. பால் பொருட்களின் விலை அதிக மாற்றங்களின்றி இருந்துள்ள நிலையில் பருப்பு, கடலை எண்ணெய் மற்றும் சர்க்கரை போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளன. 2012 ஜனவரி மாதத்தில் கிலோ ஒன்றிற்கு சராசரியாக ரூ20.51 ஆக இருந்த அரிசியின் விலை அக்டோபரில் ரூ.24.22 ஆகவும், இதே காலத்தில் கோதுமையின் விலை கிலோவிற்கு ரூ.16.22லிருந்து ரூ.19.21ஆகவும் அதிகரித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். அதே போல் கோதுமை மாவு பொருட்களின் விலை கிலோவிற்கு ரூ.17.95 லிருந்து ரூ.21.03ஆக அதிகரித்திருந்தது.

## வேளாண் துறை ஏற்றுமதி ரூ.1.31 லட்சம் கோடி



புதுடில்லி: சென்ற 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, இரண்டு மடங்கிற்கும் மேல் உயர்ந்து, 2,397 கோடி டாலராக (1.31 லட்சம் கோடி ரூபாய்) அதிகரித்துள்ளது.இது, 2010-11 மற்றும் 2009-10ம் நிதியாண்டுகளில் முறையே, 1,473 கோடி டாலர் (81,015 கோடி ரூபாய்) மற்றும் 1,056 கோடி டாலர் (58,080 கோடி ரூபாய்) என்ற அளவில் இருந்தது.அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட்டது. இந்திய நறுமணப் பொருட்கள், காபி, சர்க்கரை ஆகியவற்றிற்கு, அயல் நாடுகளில் தேவை அதிகரித்து வருகிறது.இதனால், நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி, சென்ற நிதியாண்டில், சிறப்பான அளவில் அதிகரித்துள்ளதாக, வர்த்தகம் மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் புரந்தேஸ்வரி, பார்லிமென்டில் தெரிவித்தார்.

மத்திய அரசு, சென்ற 2011ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதி மீதான தடையை நீக்கியது. இதன் விளைவாக, சென்ற நிதியாண்டில், 172 கோடி டாலர் (9,460 கோடி ரூபாய்) மதிப்பிலான, 39 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, கடந்த 2009-10ம் நிதியாண்டில், 7.60 கோடி டாலர் (418 கோடி ரூபாய்) என்ற அளவில் இருந்தது.பாசுமதி அரிசி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 31.70 டன்னாகவும், மதிப்பின் அடிப்படையில், 320 கோடி டாலராகவும் (17,600 கோடி ரூபாய்) உயர்ந்திருந்தது. இதனால், சென்ற 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த அரிசி ஏற்றுமதி, 70 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது.மத்திய அரசு, உணவு தானியங்கள் உள்ளிட்ட, வேளாண் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.குறிப்பாக, தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு தானியங்கள் கையிருப்பு, உபரி, சாதாரண மனிதனும் வாங்கும் வகையில் சந்தை விலை உள்ளதா என்பது போன்ற பல அம்சங்களின் அடிப்படையிலேயே சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சென்ற நிதியாண்டில், 183 கோடி டாலர் மதிப்பிலான, 27.40 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, கடந்த 2010-11 மற்றும் 2009-10ம் நிதியாண்டுகளில் முறையே, 119 கோடி டாலர் மற்றும் 2.30 கோடி டாலர் என்ற அளவில் இருந்தன.கடந்த மூன்று ஆண்டுகளாக, காபி, தேயிலை, நறுமணப்பொருட்கள், நிலக்கடலை, கொத்தவரை, கோதுமை ஆகிய வேளாண் பொருட்களின் ஏற்றுமதி சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது.கடந்த 2009-10ம் நிதியாண்டில், 43 கோடி டாலராக இருந்த, நாட்டின் காபி ஏற்றுமதி, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 95.20 கோடி டாலராக அதிகரித்துள்ளது. மதிப்பீட்டு காலத்தில், மிளகாய், ஏலக்காய், மஞ்சள், மிளகு உள்ளிட்ட நறுமணப்பொருட்கள் ஏற்றுமதி, 130 கோடி டாலரிலிருந்து, 275 கோடி டாலராக உயர்ந்துள்ளது.இந்திய வேளாண் பொருட்கள் ஏற்றுமதி அதிகரித்துள்ள நிலையில், சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், முந்திரி, பழங்கள் போன்ற வேளாண்

பொருட்களின் இறக்குமதியும் உயர்ந்துள்ளது.

இதில், சமையல் எண்ணெயின் பங்களிப்பே, மிகவும் அதிகமாக உள்ளது.சென்ற நிதியாண்டில், நாட்டின், வேளாண் பொருட்கள் இறக்குமதி, 1,429 கோடி டாலராக (78,595 கோடி ரூபாய்) அதிகரித்துள்ளது. இது, 2009-10ம் நிதியாண்டில், 1,070 கோடி டாலரர் என்ற அளவில் இருந்தது.கணக்கீட்டு காலத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி, 560 கோடி டாலரிலிருந்து, 966 கோடி டாலராக அதிகரித்துள்ளது.@மலும், முந்திரி இறக்குமதி, 64 கோடி டாலரிலிருந்து, 113 கோடி டாலராகவும், பருப்பு வகைகள் இறக்குமதி, 185 கோடி டாலரிலிருந்து, 207 கோடி டாலராகவும் உயர்ந்துள்ளன என, அமைச்சர் புரந்தேஸ்வரி மேலும் தெரிவித்தார்.

**எள்ளுக்கு தட்டுப்பாட்டால் நல்லெண்ணெய் விலை கிடு கிடு ..**



சேலம்: தமிழகத்தில், எள்ளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நல்லெண்ணெய் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிரபல நிறுவனங்கள் எண்ணெய் சப்ளையை நிறுத்தி விட்டன. இதனால், நல்லெண்ணெய் விலை உயர்ந்துள்ளது.அதிக விலைதமிழகத்தில் அதிக அளவில் எள் விற்பனை நடக்கும், ஈரோடு மாவட்டம் சிவகிரி, முத்தூர், கொடுமுடி, வெள்ளகோவில், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, தஞ்சாவூர், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை மண்டிகளுக்கு, எள் வரத்து குறைந்து விட்டது.சில மண்டிகளில், எள் ஏலம் முற்றிலும் நின்று விட்டது. தமிழகத்தில் விளைந்த எள்ளை, கர்நாடக, ஆந்திரா மாநில, வியாபாரிகள் அதிக விலை கொடுத்து வாங்கி சென்று விட்டதால், தமிழகத்தில் எள்ளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.இத்துடன், மின்தடை காரணமாக எண்ணெய் ஆலைகளில், நல்லெண்ணெய் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.
தமிழகத்தில், நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த, 4,756 ஆலைகளில் தற்போது, 25 சதவீதம், அதாவது, 1,652 ஆலைகளில் மட்டுமே குறைந்த அளவில் நல்லெண்ணெய் உற்பத்தி நடக்கிறது.தமிழகத்தில், எள் அறுவடை, டிசம்பர் மூன்றாவது வாரத்தில் தான் துவங்கும் என,

எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், எண்ணெய் ஆலை உரிமையாளர்கள், கோல்கட்டாவின், சிவப்பு எள்ளை எதிர்பார்க்க வேண்டிய, நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.அந்த எள் வந்தாலும், தமிழகத்தில் தொடர் மின் தடையால், எண்ணெய் உற்பத்தியை உடனடியாக, துவக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதை, சாதகமாக பயன் படுத்திக் கொண்ட, பிரபல நிறுவனங்கள், எண்ணெய் விலையை உயர்த்தி உள்ளன.குறிப்பாக, பிரபல எண்ணெய் நிறுவனம், அதன் நல்லெண்ணெய் விலையை, லிட்டருக்கு, 20 ரூபாய் அதிகரித்து, 200 ரூபாயாக உயர்த்தியுள்ளது.விலை உயர்த்தப்பட்ட நிலையில், 15 நாட்களாக நல்லெண்ணெய் வினியோகத்தையும், தற்காலிகமாக நிறுத்தி விட்டது.இதே போல், நல்லெண்ணெய் விற்பனையில் முன்னணியில் உள்ள, பிரபல நிறுவனங்கள், எண்ணெய் விலையை திடீர் என, உயர்த்தி உள்ளன. கடந்த மாதம், 145 ரூபாய்க்கு விற்ற ஒரு லிட்டர் நல்லெண்ணெய், தற்போது 165 ரூபாயாக உயர்ந்துள்ளது.இதை தொடர்ந்து, உள்ளூர் எண்ணெய் ஆலைகளும், 125 ரூபாய்க்கு விற்ற ஒரு லிட்டர் நல்லெண்ணெய் விலையை, 150 ரூபாயாக உயர்த்தியுள்ளன.

நல்லெண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு மேலும், அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில், பெரிய வியாபாரிகள் அதிக அளவில் எண்ணெய்யை பதுக்கி வருவதாக, சிறுவியாபாரி கள் குற்றம் சாட்டுகின்றனர்.சேலம், செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த நல்லெண்ணெய் வியாபாரி கந்தசாமி கூறியதாவது:தமிழகத்தில், எள் அறுவடை துவங்க இன்னும், ஒரு மாதத்துக்கு மேல் ஆகி விடும் என்பதால், சந்தையில் எள்ளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதே நேரத்தில், மின் தடை காரணமாக, 75 சதவீத எண்ணெய் ஆலைகள் மூடப்பட்டு விட்டதால், விற்பனைக்கு வரும் நல்லெண்ணெய்யின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டு, விலை உயர்ந்துள்ளது. இது, மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

29.11.2012 A.M

**வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பார்த்தீனிய செடிகள் அழிப்பு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பார்த்தீனிய செடிகளை அழிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து ஒருவாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு ஆட்சியர் சம்பத் உத்தரவிட்டுள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பார்த்தீனிய செடிகளை அழிப்பது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகளுடன் ஆய்வுக்கூட்டம் விழுப்புரம் ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தது.

ஆட்சியர் சம்பத் தலைமை தாங்கி பேசியதாவது. நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தற்போது பார்த்தீனிய செடிகள் அதிகளவில் வளர்ந்து வருகிறது. இந்த செடிகளினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அபாயத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஊரக வளர்ச்சி, விவசாயம், சுகாதாரம், பொதுப்பணித்துறை, கல்வித்துறை மூலம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் விழிப்புணர்வு கூட்டம் நடத்த வேண்டும்.

உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கிடையே பார்த்தீனியம் செடி அழிப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் மூலம் பார்த்தீனியம் செடிகளை முற்றிலும் அழிக்க வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இச்செடிகளால் ஏற்படும் பாதிப்புகள், அவற்றை அழிக்க வேண்டிய அவசியம் குறித்து கட்டுரை போட்டி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் பார்த்தீனிய செடிகளை கைவினை முறை, உயிரியல் முறை, ரசாயன முறை ஆகியவற்றின் மூலமும் அழிக்கலாம்.

அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பார்த்தீனிய செடிகளை அழிப்பதன் அவசியம் குறித்து ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வுகள், செடிகளை அழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து உரிய புகைப்படங்களுடன்

ஒருவாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (பொ) ராஜா, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) சாம்சன் தினகர்பாபு மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**பயிர்காப்பீடு செய்து பயனடைய வேண்டும்**

வானூர், : வானூர் வட்டாரத்தில் விவசாயிகள் சாகுபடி செய்திடும் நெல், கரும்பு, பயறுவகை பயிர்கள், மணிலா, தோட்டக்கலைப்பயிர்கள் போன்ற பயிர்கள் இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல் மற்றும் வறட்சி போன்ற அசாதாரணமான சூழ்நிலையினால் மகசூல் இழப்பு நேரிடும் போது விவசாயிகளுக்கு உதவிட தமிழக அரசு தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் பயிர் காப்பீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

பிர்கா அளவில் மூன்று ஆண்டுகளில் சராசரி மகசூலில் இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், வறட்சி ஆகியவற்றால் பாதிப்பு ஏற்பட்டிருப்பின் அவற்றுக்கு தேசிய பயிர் காப்பீட்டு நிறுவனத்தால் காப்பீடு வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் வரவு வைக்கப்படுகிறது.

பயிர்க்கடன் பெறும் விவசாயிகளுக்கு சம்மந்தப்பட்ட வங்கிகள் பயிர்காப்பீடு பிரிமியம் தொகையினை கடன் தொகையிலிருந்து பிடித்தம் செய்கிறது. பயிர்கடன் பெறாத விவசாயிகள் பயிர்காப்பீடு படிவங்களுடன் சிட்டா அல்லது அடங்கல் இணைத்து உரிய தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களில் பிரிமியத்தொகை கட்டலாம். ஏக்கருக்கு பயிர்காப்பீடு செய்திட ரூ. 177 பிரிமியம் செலுத்த வேண்டும். தமிழக அரசு சிறுகுறு விவசாயிகளுக்கு பிரிமியத்தொகையில் 55 சத மான்யமாக ரூ,96 வழங்குகிறது.

எனவே மானியம் போக ஏக்கருக்கு ரூ.78 பிரிமியம் கட்டினால் போதுமானது. மற்றும் இதர விவசாயிகளுக்கு ரூ.85 செலுத்த வேண்டும். உளுந்து பயிருக்கு ஏக்கருக்கு ரூ. 2988 என்ற அளவில் பயிர்காப்பீடு செய்திட ஏக்கருக்கு 87 செலுத்தினால் போதும்.

பயிர் காப்பீட்டு படிவங்களை உதவி வேளாண்மை அலுவலரிடம் கையொப்பம் பெற்று தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் செலுத்தி பதிவு செய்யலாம். டிசம்பர் 15ம் தேதிக்குள்ள படிவங்களை பெற்று பயனடையவேண்டும் என்று வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடிஜெபக்குமார் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**முட்டை கொள்முதல் விலை ஒரே நாளில் 35 காசு குறைப்பு**



நாமக்கல் : சபரிமலை சீசன் காரணமாக நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை நேற்று ஒரே நாளில் 35 காசுகள் குறைக்கப்பட்டது.

நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் பண்ணை கொள்முதல் விலை கடந்த 10 நாட்களுக்கு மேலாக 310 காசாக இருந்தது. கார்த்திகை மாதம் பிறந்ததும் சபரிமலைக்கு பக்தர்கள் மாலை அணிந்ததால், தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை சரிவடைந்தது. இதையடுத்து, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு, முட்டை கொள்முதல் விலையை நேற்று குறைத்துள்ளது.

அதன்படி, 310 காசாக இருந்த முட்டை கொள்முதல் விலையில் 35 காசுகள் குறைத்து 275 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டை கோழி ரூ.40 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.52 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது. முட்டை விலை சரிவு குறித்து பண்ணையாளர்கள் கூறியதாவது: முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 275 காசாக நிர்ணயம் செய்யப்பட்டாலும், என்.இ.சி.சி, மைனஸ் 25 காசு என அறிவித்துள்ளது. இதன் மூலம், விற்பனையாளருக்கு முட்டையை 250 காசுக்குதான் பண்ணையாளர்கள் கொடுக்கிறார்கள். ஆனால், சில்லறை வியாபாரிகள் முட்டை விலையை குறைக்காமல் பழைய விலைக்கே விற்கிறார்கள். இதன் மூலம் பண்ணைகளில் முட்டை விலை குறைந்தாலும் கடைகளில் குறைவதில்லை.